ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2396/35 - 2024 අගෝස්තු මස 08 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.08.08

2396/35 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: ARA/LND/ACQV1/D3/52.
உல்லாச பிரயாண மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/15/2018/VE/08.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், அரனாயக பிரதேச செயலகப் பிரிவின், கல்பட கோரளை (மேற்கு) சிறுபிரிவு, இலக்கம் 43பீ, கடபேரிகந்த கிராம அலுவலர் பிரிவின், வலிமன்ன கிராமத்தில் அமைந்துள்ள சிரேஷ்ட நில அளவையாளர் அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட 2019.12.17 ஆந் திகதியுடைய ஆ.கி.கே. 3742 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01, எனக் காட்டப்பட்டுள்ள 0.0202 ஹெக்டயார் விஸ்தீரண முடைய நிகதன்ன வத்த என்னும் காணியின் எல்லைகள் பின்வருமாறு:

**துண்டு இல. 1 - காணியின் பெயர்: நிகதன்ன வத்த; விபரம்: காணி எடுத்தல் சட்டத்தின் 38 (அ) ஆம் பிரிவின் உப பிரிவு ஏற்பாடுகளின் கீழ் காணி எடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் காணிக்கு உரிமை கோருபவரை இனங்காண முடியாமலிருக்கிறது. காணி எடுத்தல் நடவடிக்கையை நிறைவு செய்வதற்காக; விஸ்தீரணம்: 0.0202 ஹெக்டயார்.**

வடக்கு: பாதை (பிரதேச சபை) மற்றும் நிகதன்ன வத்த; கிழக்கு: நிகதன்ன வத்த மற்றும் பூவலிகட வத்த; தெற்கு: பாதை, பூவலிகட வத்த மற்றும் நிகதன்ன வத்த; மேற்கு: நிகதன்ன வத்த மற்றும் பாதை.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அரனாயக பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஷாமலி பியதிஸ்ஸ,
பிரதேச செயலாளர்
அரனாயக.

பிரதேச செயலகம்,
அரனாயக,
2024, ஓகத்து 02.

EOG 08 - 0095

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: MD/ED/03/ACQ/20.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4/3/4/2014/LO/431.

மொணராகலை பொலிஸ் அலுவலர் பணிமனைக்கென அரசாங்கத்திற்கு எடுக்கப்பட்ட காணிக்குப் பதிலாக வெளியிடப்பட்ட 2019.09.24 மற்றும் 2142/13 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 7ஆவது பிரிவின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குரிய உரிமை கோரும் அல்லது வேறு தொடர்புகள் கூறும் அனைவரும் சமுகமளித்து 2019.10.29 ஆந் திகதி என்னைச் சந்திக்க வேண்டும் எனப்படுவதும் 2374/22 ஆம் இலக்கமும் 2024.03.06 ஆந் திகதியிடப் பட்டதுமான திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 2024.03.27 எனும் திகதி 2024.11.25 எனத் திருத்தப்பட வேண்டு மென இத்தால் அறியத்தருகிறேன்.

டபிள்யூ. டீ. பீ. சீ. சமரசேகர,
பிரதேச செயலாளர்,
மொணராகலை.

பிரதேச செயலகம்,
மொணராகலை,
2024, யூலை 31.

EOG 08 - 0061

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.